10.03.2025 OS.No. 169/2011

சாட்சி : PW 1 **சொக்கலிங்கம்**

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**குறுக்கு விசாரணை:**

நான் கண்மருத்துவராக சென்னையில் பணிபுரிந்து வருகிறேன். நான் குடும்பத்துடன் சென்னையில் தான் வசித்து வருகிறேன் என்றால் தற்போது சென்னையில் வசித்து வருகிறேன். நான் நிருபணவாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் என் வழக்கறிஞருக்கு நான் தான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பிராதுடன் தாக்கல் செய்த வம்சாவழி பட்டியல் குறிதத விவரம் எனக்கு தெரியுமா என்றால் சரிதான். நான் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாவா சொத்தில் எனக்கு பங்கு உள்ளது என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

**(வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்)– திருமதி.P.கலை நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.